திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தீ விபத்து மற்றும் வெள்ள பாதிப்புகளால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு தற்போது எவ்வளவு நட்டம் ஏற்பட்டாலும் ரூபாய் 400 என்றிருப்பதை உண்மையில் ஏற்பட்ட நட்டத்தை கணக்கிட்டு நட்டம் முழுவதையும் வழங்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,53,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, தீ விபத்தில் எரிந்த குடிசைகளுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 1,000 வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,53,00,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளைப் பற்றிய விரிவான *விளக்க உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே படித்திருக்கக் கூடும். அவர்கள் கருத்துக்களை நான் தெரிந்ததற்குப் பிறகு இறுதியில் எனது கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன் என்று கூறி அமைகின்றேன்.

9. காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி சென்னையில் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து.

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்** : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னால் நான் ஒரு வாழ்த்துச் செய்தியைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த 2, 3 தலைமுறைகளாக தமிழகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக ஆக்கிக் கொண்டிருந்த காவிரி

---

*118–173-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்று உள்ளன.

1990 ஏப்ரல் 19] [திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்]

நீர்ப் பிரச்சினையினுடைய ஒரு நல்ல கட்டமாக இன்றைய தினம் நமது முதல்வர் அவர்கள் அந்தப் பேச்சு வார்த்தையை தமிழகத்தின் மண்ணிலே ஆரம்பிக்கின்ற முதல் கட்டப் பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே அவர்களுக்கு அரசியல் கட்சிகளைச் சார்ந்த—நமக்குள்ளே பல்வேறு அபிப்பிராயபேதங்கள் இருந்தாலும் கூட இந்த நல்ல முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்களையும் அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற அனைத்துக் கட்சி—இந்த மன்றத்திலே எந்த எந்தக்கட்சிகள் எல்லாம் இருக்கின்றனவோ அத்துனை கட்சிகளுடைய—தலைவர்களும் இனி நமது முதல்வருக்குப் பின்னால் ஒரே தமிழகமாக நின்று, இது தமிழகத்தினுடைய பிரச்சினை என்கின்ற கருத்தினை வலியுறுத்துகின்ற வகையிலே இன்றைய காலைக் கூட்டம் நடந்தது என்று நான் தெரிந்துகொண்டேன். இந்த முயற்சிக்கு ஆதரவு முழு மனதாக கட்சி வேறுபாடு இல்லாமல் இந்த மாமன்றம் முழுமையும் இந்த அரசின் பின்னால் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கவும், இந்த நல்ல முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்களுக்கும், அவர்களுக்கு ஒத்துழைப்பு தந்திருக்கின்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர், அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகளுக்கும் இந்த அவையின் சார்பாக எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த நல்ல முயற்சி வெற்றி பெற நாங்கள் அனைவரும் ஒருமித்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளுகின்றேன். அவருடைய வாழ்த்துரையிலே ஒரு திருத்தம். முதல்வருக்குப் பின்னால் அனைத்துக் கட்சித் தலைவர்களும் என்று சொன்னார்; முதல்வரோடு என்று திருத்திக் கொள்ளவும்.

திரு. கோ. வீரையன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை வாதப் பொருளாக ஆக்க வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் வீரையன் அவர்கள் இங்கே பேசியது அவைக் குறிப்பில் ஏறாமல் இருந்தால் இந்தப் பிரச்சினையில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம், ஒருவரோடொருவர் கருத்து மோதல் இல்லாமல் என்ற நிலை இருக்கும். எனவே அவருடைய சம்மதத்தோடு நான் கேட்டுக்கொள்கிறேன் அது அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம் என்று.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய முதல்வர் அவர்களுடைய கருத்து, இந்த அவையினுடைய ஒட்டுமொத்த மான கருத்து. நம்முடைய திரு. வீரையன் அவர்களுடைய ஒப்புதலோடு அவையின் சார்பில், அவர் பேசிய அந்தத் தொடர் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

8. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

*திரு. வெ. இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நிலவரித் துறை, முத்திரைத் தாள்கள்—நிருவாகம், பத்திரப்பதிவு, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த மானியக் கோரிக்கையில் நான் சார்ந்துள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த அவைமுன் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

வருவாய்த் துறை என்பது மிகவும் முக்கியமான துறை ஆகும். ஒரு காலத்தில் ஆண்ட குறுநில மன்னர்கள் எல்லாம் நில வரியையே முதன்மையாகக் கொண்டு ஆட்சி செய்த காலம் எல்லாம் உண்டு.

10-25 மணி

ஆனால் இன்றைக்கு நிலவரி இல்லாமல் ஆட்சி செய்யக்கூடிய அளவுக்கு பல வழிகளில் அரசுக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நிலவரியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 33.45 கோடி ரூபாய்க்கு பாக்கி என்று பாக்கிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த குறைந்த அளவு பாக்கியை வசூல் செய்வதில் இன்றைக்கு வருவாய்த் துறை அலுவலர்கள் மிகவும் தீவிரமாக இறங்கி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 3, 4 வருட காலமாக தமிழகத்திலே பருவ மழை அங்கொன்றும் இங்கொன்றுமாக பெய்ததன் காரணமாக நிறைய மாவட்டங்கள் இன்றைக்கு வறட்சிக்கு இலக்காகி இருக்கிறது. அப்படி வறட்சிக்கு இலக்காகி இருக்கின்ற அந்தப் பகுதிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஆய்வு செய்து அந்தந்தப் பகுதிகளை வறட்சிப்பகுதிகளாக அறிவித்து அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அங்கே வறட்சியாக உள்ள அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் குறிப்பாக என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்ற குளத்தூர்